ஸ்ரீமதே இராமானுஜாய நம:

## மணவாள மாமுனிகள் அருளிச் செய்த
# திருவாய்மொழி நூற்றந்தாதி

### திருவாய்மொழி நூற்றந்தாதி தனியன்கள்

அல்லும் பகலும் அனுபவிப்பார் தங்களுக்குச் *
சொல்லும் பொருளும் தொகுத்துரைத்தான் * - நல்ல
மணவாள மாமுனிவன் மாறன் மறைக்கு *
தணவா நூற்றந்தாதி தான்

மன்னு புகழ் சேர் மணவாள மாமுனிவன் *
தன் அருளால் உட்பொருள்கள் தன்னுடனே[1] - சொன்ன *
திருவாய்மொழி நூற்றந்தாதியாம் தேனை *
ஒருவாதருந்து நெஞ்சே! உற்று

## மணவாள மாமுனிகள் அருளிச் செய்த
# திருவாய்மொழி நூற்றந்தாதி

* உயர்வே பரன் படியை * உள்ளதெல்லாம் தான் கண்டு *
உயர் வேதம் நேர் கொண்டுரைத்து ** - மயர்வேதும்
வாராமல் * மானிடரை வாழ்விக்கும் மாறன் சொல் *
வேராகவே விளையும் வீடு 1

* வீடு செய்து மற்றெவையும் * மிக்க புகழ் நாரணன் தாள் *
நாடு நலத்தால் அடைய நன்குரைக்கும் ** - நீடு புகழ்
வண்குருகூர் மாறன் * இந்த மாநிலத்தோர் தாம் வாழ *
பண்புடனே பாடி அருள் பத்து 2

பத்துடையோர்க்கு என்றும் * பரன் எளியனாம் பிறப்பால் *
முத்தி தரும் மாநிலத்தீர்! மூண்டவன் பால் ** - பத்தி செய்யும்
என்றுரைத்த * மாறன் தனின் சொல்லால் போம் * நெடுகச்
சென்ற பிறப்பாம் அஞ்சிறை 3

அஞ்சிறைய புட்கள் தமை * ஆழியானுக்கு * நீர்
என் செயலைச் சொல்லும் என இரந்து ** - விஞ்ச
நலங்கியதும் மாறன் இங்கே * நாயகனைத் தேடி *
மலங்கியதும் பத்தி வளம் 4

வளம் மிக்க மால் பெருமை * மன்னுயிரின் தண்மை *

[1] தம்முடனே

உளம் உற்று அங்கூடுருவ ஓர்ந்து ** - தளர்வுற்று
நீங்க நினை மாறனை மால் * நீடிலகு சீலத்தால் *
பாங்குடனே சேர்த்தான் பரிந்து 5

பரிவதில் ஈசன் படியைப் * பண்புடனே பேசி *
அரியனலன் ஆராதனைக்கென்று ** - உரிமையுடன்
ஓதி அருள் மாறன் * ஒழிவித்தான் இவ்வுலகில் *
பேதையர்கள் தங்கள் பிறப்பு 6

பிறவி அற்று நீள்விசும்பில் * பேரின்பம் உய்க்கும் *
திறம் அளிக்கும் சீலத்திருமால் ** - அறவினியன்
பற்றும் அவர்க்கு என்று * பகர் மாறன் பாதமே *
உற்ற துணை என்று உள்ளமே! ஓடு 7

ஓடு மனம் செய்கை * உரை ஒன்றின் இல்லாதாருடனே *
கூடி நெடுமால் அடிமை கொள்ளும் நிலை ** - நாடறிய
ஓர்ந்தவன் தன் செம்மை * உரை செய்த மாறன் என *
ஏய்ந்து நிற்கும் வாழ்வாம் இவை 8

இவை அறிந்தோர் தம் அளவில் * ஈசன் உவந்தாற்ற *
அவயவங்கள் தோறும் அணையும் - சுவை அதனைப்
பெற்று ** ஆர்வத்தால் மாறன் * பேசின சொல் பேச * மால்
பொற்றாள் நம் சென்னி பொரும் 9

பொரும் ஆழி சங்குடையோன் * பூதலத்தே வந்து *
தருமாறோர் ஏதுவறத் தன்னை ** - திரமாகப்
பார்த்து உரை செய் மாறன் * பதம் பணிக என் சென்னி *
வாழ்த்திடுக என்னுடைய வாய் 10

வாயும் திருமால் மறைய நிற்க * ஆற்றாமை
போய் விஞ்சி மிக்க புலம்புதலாய் ** - ஆய
அறியாதவற்றோடு * அணைந்தழுத மாறன் *
செறிவாரை நோக்கும் திணிந்து 11

திண்ணிதா மாறன் * திருமால் பரத்துவத்தை *
நண்ணி அவதாரத்தே நன்குரைத்த ** - வண்ணம் அறிந்து
அற்றார்கள் யாவர் * அவர் அடிக்கே ஆங்கவர் பால் *
உற்றாரை மேலிடாதூன் 12

ஊனம் அறவே வந்து * உள் கலந்த மால் இனிமை
ஆனது * அனுபவித்தற்காம் துணையா ** - வானில்
அடியார் குழாம் கூட * ஆசை உற்ற மாறன் *
அடியாருடன் நெஞ்சே! ஆடு 13

ஆடி மகிழ் வானில் * அடியார் குழாங்களுடன் *
கூடி இன்பம் எய்தாக் குறை அதனால் ** - வாடி மிக
அன்புற்றார் தம் நிலைமை * ஆய்ந்துரைக்க மோகித்து *
துன்புற்றான் மாறன் அந்தோ! 14

அந்தாமத்தன்பால் * அடியார்களோடு இறைவன் *
வந்தாரத் தான் கலந்த வண்மையினால் ** - சந்தாபம்
தீர்ந்த * சடகோபன் திருவடிக்கே நெஞ்சமே! *
வாய்ந்த அன்பை நாள் தோறும் வை 15

வைகுந்தன் வந்து * கலந்ததற் பின் வாழ் மாறன் *
செய்கின்ற நைச்சியத்தைச் சிந்தித்து ** - நைகின்ற
தன்மை தனைக் கண்டு * உன்னைத் தான் விடேன் என்றுரைக்க *
வன்மை அடைந்தான் கேசவன் 16

கேசவனால் எந்தமர்கள் * கீழ் மேல் எழு பிறப்பும் *
தேசடைந்தார் என்று சிறந்துரைத்த ** - வீசு புகழ்
மாறன் மலர் அடியே * மன்னுயிர்க்கெல்லாம் உய்கைக்கு *
ஆறென்று நெஞ்சே! அணை 17

அணைந்தவர்கள் தம்முடனே * ஆயன் அருட்காளாம் *
குணம் தனையே கொண்டு உலகைக் கூட்ட ** - இணங்கி மிக
மாசில் உபதேசம் செய் * மாறன் மலர் அடியே *
வீசு புகழ் எம்மா வீடு 18

எம்மா வீடும் வேண்டா * எந்தனக்கு உன் தாள் இணையே *
அம்மா அமையும் என ஆய்ந்துரைத்த ** - நம்முடைய
வாழ் முதலாம் மாறன் * மலர்த் தாள் இணை சூடி *
கீழ்மை உற்று நெஞ்சே! கிளர் 19

* கிளர் ஒளி சேர் * கீழ் உரைத்த பேறு கிடைக்க *
வளர் ஒளி மால் சோலை மலைக்கே ** - தளர்வறவே
நெஞ்சை வைத்துச் சேரும் எனும் * நீடு புகழ் மாறன் தாள் *
முன் செலுத்துவோம் எம் முடி 20

முடியார் திருமலையில் * மூண்டு நின்ற மாறன் *
அடிவாரம் தன்னில் அழகர் - வடிவழகைப்
பற்றி ** முடியும் அடியும் படிகலனும் *
முற்றும் அனுபவித்தான் முன் 21

முன்னம் அழகர் எழில் * மூழ்கும் குருகையர் கோன் *
இன்ன அளவென்ன எனக்கரிதாய்த் - தென்ன **

கரணக் குறையின் கலக்கத்தை * கண்ணன்
ஒருமைப்படுத்தான் ஒழித்து 22

* ஒழிவிலாக் காலம் * உடனாகி மன்னி *
வழுவிலா ஆட்செய்ய மாலுக்கு ** - எழு சிகர
வேங்கடத்துப் பாரித்த * மிக்க நலம் சேர் மாறன் *
பூங்கழலை நெஞ்சே! புகழ் 23

புகழ் ஒன்று மால் * எப்பொருள்களும் தானாய் *
நிகழ்கின்ற நேர் காட்டி நிற்க ** - மகிழ் மாறன்
எங்கும் அடிமை செய்ய * இச்சித்து வாசிகமாய் *
அங்கடிமை செய்தான் மொய்ம்பால் 24

மொய்ம்பாரும் மாலுக்கு * முன் அடிமை செய்து உவப்பால் *
அன்பால் ஆட்செய்பவரை ஆதரித்தும் ** - அன்பிலா
மூடரை நிந்தித்தும் * மொழிந்தருளும் மாறன் பால் *
தேடரிய பத்தி நெஞ்சே! செய் 25

செய்ய பரத்துவமாய்ச் * சீரார் வ்யூகமாய் *
துய்ய விபவமாய்த் தோன்றிவற்றுள் ** - எய்தும் அவர்க்கு
இந்நிலத்தில் * அர்ச்சாவதாரம் எளிதென்றான் *
பன்னு தமிழ் மாறன் பயின்று 26

பயிலும் திருமால் பதம் தன்னில் * நெஞ்சம்
தயலுண்டு நிற்கும் ததியர்க்கு ** - இயல்வுடனே
ஆளானார்க்கு ஆளாகும் * மாறன் அடி அதனில் *
ஆளாகார் சன்மம் முடியா 27

முடியாத ஆசை மிக * முற்று கரணங்கள் *
அடியார் தம்மை விட்டு அவன் பால் - படியா ** ஒன்
றொன்றின் செயல் விரும்ப * உள்ளதெல்லாம் தாம் விரும்ப *
துன்னியதே மாறன் தன் சொல் 28

சொன்னாவில் வாழ் புலவீர்! * சோறு கூறைக்காக *
மன்னாத மானிடரை வாழ்த்துதலால் - என்னாகும்? **
என்னுடனே மாதவனை * ஏத்தும் எனும் குருகூர் *
மன்னருளால் மாறும் சன்மம் 29

சன்மம் பல செய்து * தான் இவ்வுலகளிக்கும் *
நன்மை உடை மால் குணத்தை நாள் தோறும் ** - இம்மையிலே
ஏத்தும் இன்பம் பெற்றேன் * எனும் மாறனை உலகீர்! *
நாத்தழும்ப ஏத்தும் ஒரு நாள் 30

ஒரு நாயகமாய் * உலகுக்கு * வானோர்
இரு நாட்டில் ஏறி உய்க்கும் இன்பம் - திரமாக **
மன்னுயிர்ப் போகம் தீது * மால் அடிமையே இனிதாம் *
பன்னி இவை மாறன் உரைப்பால் 31

பாலரைப் போல் சீழ்கிப் * பரன் அளவில் வேட்கையால் *
காலத்தால் தேசத்தால் கை கழிந்து[2] ** - சால
அரிதான போகத்தில் * ஆசை உற்று நைந்தான் *
குருகூரில் வந்துதித்த கோ 32

கோவான ஈசன் * குறை எல்லாம் தீரவே *
ஓவாத காலத்து உவாதி தனை ** - மேவிக்
கழித்தடையக் காட்டிக் * கலந்த குண மாறன் *
வழுத்துதலால் வாழ்ந்தது இந்த மண் 33

மண்ணுலகில் முன் கலந்து * மால் பிரிகையால் * மாறன்
பெண் நிலைமையாய்க் காதல் பித்தேறி ** - எண்ணிடில் முன்
போலி முதலான பொருளை * அவனாய் நினைந்து *
மேல் விழுந்தான் மையல் தனின் வீறு 34

வீற்றிருக்கும் மால் விண்ணில் * மிக்க மயல் தன்னை *
ஆற்றுதற்காத் தன் பெருமை ஆனதெல்லாம் ** - தோற்ற வந்து
நன்று கலக்கப் போற்றி * நன்குகந்து வீறு உரைத்தான் *
சென்ற துயர் மாறன் தீர்ந்து 35

தீர்ப்பாரிலாத * மயல் தீரக் கலந்த மால் *
ஓர்ப்பாதும் இன்றி உடன் பிரிய ** - நேர்க்க
அறிவழிந்து * உற்றாரும் அறக் கலங்க * பேர் கேட்டு
அறிவு பெற்றான் மாறன் சீலம் 36

சீல மிகு கண்ணன் * திருநாமத்தால் உணர்ந்து *
மேலவன் தன் மேனி கண்டு மேவுதற்கு ** - சால
வருந்தி இரவும் பகலும் * மாறாமல் கூப்பிட்டு *
இருந்தனனே தென் குருகூர் ஏறு 37

ஏறு திருவுடைய * ஈசன் உகப்புக்கு *
வேறு படில் என் உடைமை மிக்க உயிர் ** - தேறுங்கால்
என்தனக்கும் வேண்டா * எனும் மாறன் தாளை நெஞ்சே! *
நந்தமக்குப் பேறாக நண்ணு 38

நண்ணாது மால் அடியை * நானிலத்தே வல்வினையால் *

---

[2] கழிந்து

எண்ணாராத் துன்பம் உறும் இவ்வுயிர்கள் ** - தண்ணிமையைக்
கண்டிருக்க மாட்டாமல் * கண் கலங்கும் மாறன் அருள் *
உண்டு நமக்கு உற்ற துணை ஒன்று 39

* ஒன்றும் இலைத் தேவு * இவ்வுலகம் படைத்த மால் *
அன்றி என ஆரும் அறியவே ** - நன்றாக
மூதலித்துப் பேசி அருள் * மொய்ம்மகிழோன் தாள் தொழவே *
காதலிக்கும் என்னுடைய கை 40

கையாரும் சக்கரத்தோன் * காதல் இன்றிக்கே இருக்க *
பொய்யாகப் பேசும் புறன் உரைக்கு ** - மெய்யான
பேற்றை உபகரித்த * பேரருளின் தன்மை தனை *
போற்றினனே மாறன் பொலிந்து 41

* பொலிக பொலிக என்று * பூமகள் கோன் தொண்டர் *
மலிவு தனைக் கண்டுகந்து வாழ்த்தி ** - உலகில்
திருந்தாதார் தம்மைத் * திருத்திய மாறன் சொல் *
மருந்தாகப் போகும் மன மாசு 42

மாசறு சோதி * கண்ணன் வந்து கலவாமையால் *
ஆசை மிகுந்து பழிக்கு அஞ்சாமல் ** - ஏசறவே[3]
மண்ணில் மடலூர * மாறன் ஒருமித்தான் *
உள் நடுங்கத் தான் பிறந்த ஊர் 43

ஊர நினைந்த * மடல் ஊரவும் ஒண்ணாதபடி *
கூரிருள் சேர் கங்குலுடன் கூடி நின்று ** - பேராமல்
தீது செய்ய மாறன் * திரு உள்ளத்துச் சென்ற துயர் *
ஓதுவது இங்கு எங்ஙனேயோ? 44

எங்ஙனே நீர் முனிவது * என்னை இனி? நம்பி அழகு *
இங்ஙனே தோன்றுகின்றது என் முன்னே ** - அங்ஙன்
உருவெளிப்பாடா * உரைத்த தமிழ் மாறன் *
கருதும் அவர்க்கு இன்பக் கடல் 45

கடல் ஞாலத்தீசனை * முன் காணாமல் நொந்தே *
உடனா அனுகரிக்கல் உற்று ** - திடமாகா
வாய்ந்தவனாய்த் தான் பேசும் * மாறன் உரை அதனை *
ஆய்ந்துரைப்பார் ஆட்செய்ய நோற்றார் 46

நோற்ற நோன்பாதி இலேன் * உன்[4] தனை விட்டாற்றகில்லேன் *

---

[3] ஏசவே

பேற்றுக்கு உபாயம் உன்தன் பேரருளே - சாற்றுகின்றேன் **
இங்கென் நிலை என்னும் * எழில் மாறன் சொல் வல்லார் *
அங்கு அமரர்க்கு ஆராவமுது 47

* ஆராவமுதாழ்வார் * ஆதரித்த பேறுகளை *
தாராமையாலே தளர்ந்து மிக ** - தீராத
ஆசையுடன் ஆற்றாமை பேசி * அலமந்தான் *
மாசறு சீர் மாறன் எம்மான் 48

மாநலத்தால் மாறன் * திருவல்லவாழ் புகப் போய் *
தான் இளைத்து வீழ்ந்து அவ்வூர் தன் அருகில் ** - மேல் நலங்கித்
துன்பம் உற்றுச் சொன்ன * சொலவு கற்பார் தங்களுக்கு *
பின் பிறக்க வேண்டா பிற 49

பிறந்து உலகம் காத்தளிக்கும் * பேரருள் கண்ணா! * உன்
சிறந்த குணத்தால் உருகும் சீலத் - திறம் தவிர்ந்து **
சேர்ந்தனுபவிக்கும் நிலை * செய் என்ற சீர் மாறன் *
வாய்ந்த பதத்தே மனமே! வைகு 50

வைகல் திருவண்வண்டூர் * வைகும் இராமனுக்கு * என்
செய்கை தனைப் புள் இனங்காள்! செப்பும் என * - கை கழிந்த
காதலுடன் தூது விடும் * காரி மாறன் கழலே *
மேதினியீர்! நீர் வணங்குமின் 51

மின்னிடையார் சேர் கண்ணன் * மெத்தென வந்தான் என்று *
தன் நிலை போய்ப் பெண் நிலையாய்த் தான் தள்ளி ** - உன்னுடனே
கூடேன் என்றூடும் * குருகையர் கோன் தாள் தொழவே *
நாள் தோறும் நெஞ்சமே! நல்கு 52

நல்ல வலத்தால் * நம்மைச் சேர்த்தோன் முன் நண்ணாரை *
வெல்லும் விருத்த விபூதியன் என்று ** - எல்லை அறத்
தான் இருந்து வாழ்த்தும் * தமிழ் மாறன் சொல் வல்லார் *
வானவர்க்கு வாய்த்த குரவர் 53

குரவை முதலாம் * கண்ணன் கோலச் செயல்கள் *
இரவு பகல் என்னாமல் என்றும் ** - பரவு மனம்
பெற்றேன் என்றே களித்துப் * பேசும் பராங்குசன் தன் *
சொல் தேனில் நெஞ்சே! துவள் 54

துவளறு சீர் மால் திறத்துத் * தொன்னலத்தால் * நாளும்
துவளறு தன் சீலம் எல்லாம் சொன்னான் ** - துவளறவே

[4] நுன்

முன்னம் அனுபவத்தில் * மூழ்கி நின்ற மாறன் அதில் *
மன்னும் உவப்பால் வந்த மால் 55

மாலுடனே தான் கலந்து * வாழப் பெறாமையால் *
சால நைந்து தன் உடைமை தான் அடையக் - கோலியே *
தான் இகழ வேண்டாமல் * தன்னை விடல் சொல் மாறன் *
ஊனம் அறு சீர் நெஞ்சே! உண் 56

உண்ணும் சோறாதி * ஒரு மூன்றும் எம்பெருமான் *
கண்ணன் என்றே நீர் மல்கிக் கண்ணிணைகள் ** - மண் உலகில்
மன்னு திருக்கோளூரில் * மாயன் பால் போம் மாறன் *
பொன் அடியே நந்தமக்குப் பொன் 57

பொன் உலகு பூமி எல்லாம் * புள் இனங்கட்கே வழங்கி *
என் இடரை மாலுக்கு இயம்பும் என ** - மன்னு திரு
நாடு முதல் * தூது நல்கி விடும் மாறனையே *
நீடுலகீர்! போய் வணங்கும் நீர் 58

நீராகி கேட்டவர்கள் * நெஞ்சழிய * மாலுக்கும்
ஏரார் விசும்பில் இருப்பரிதா ** - ஆராத
காதலுடன் கூப்பிட்ட * காரி மாறன் சொல்லை *
ஓதிடவே உய்யும் உலகு 59

* உலகுய்ய மால் நின்ற * உயர் வேங்கடத்தே *
அலர் மகளை முன்னிட்டு அவன் தன் - மலர் அடியே **
வன் சரணாய்ச் சேர்ந்த * மகிழ் மாறன் தாள் இணையே *
உன் சரணாய் நெஞ்சமே! உள் 60

உண்ணிலா ஐவருடன் இருத்தி * இவ்வுலகில் *
எண்ணிலா மாயன் எனை நலிய - எண்ணுகின்றான் **
என்று நினைந்து ஓலமிட்ட * இன்புகழ் சேர் மாறன் என *
குன்றி விடுமே பவக் கங்குல் 61

* கங்குல் பகலரதி * கை விஞ்சி மோகம் உற *
அங்கதனைக் கண்டோர் அரங்கரைப் பார்த்து ** - இங்கிவள் பால்
என் செய்ய நீர் எண்ணுகின்றது என்னும் * நிலை சேர் மாறன் *
அஞ்சொல் உற நெஞ்சு வெள்ளையாம் 62

வெள்ளிய நாமம் கேட்டு * விட்டகன்ற பின் மோகம் *
தெள்ளிய மால் தென் திருப்பேர் சென்று புக ** - உள்ளம் அங்கே
பற்றி நின்ற தன்மை * பகரும் சடகோபற்கு *
அற்றவர்கள் தாம் ஆழியார் 63

ஆழி வண்ணன் தன் விசயம் * ஆனவை முற்றும் காட்டி *
வாழ் இதனால் என்று மகிழ்ந்து நிற்க ** - ஊழில் அவை
தன்னை இன்று போல் கண்டு * தான் உரைத்த மாறன் சொல் *
பன்னுவரே நல்லது கற்பார் 64

கற்றோர் கருதும் * விசயங்களுக்கு எல்லாம் *
பற்றாம் விபவ குணப் பண்புகளை ** - உற்றுணர்ந்து
மண்ணில் உள்ளோர் தம் இழவை * வாய்ந்துரைத்த மாறன் சொல் *
பண்ணில் இனிதான தமிழ்ப் பா 65

பா மருவு வேதம் * பகர் மால் குணங்களுடன் *
ஆம் அழகு வேண்டற்பாடாம் அவற்றை ** - தூ மனத்தால்
நண்ணி அவனைக் காண * நன்குருகிக் கூப்பிட்ட *
அண்ணலை நண்ணார் ஏழையர் 66

ஏழையர்கள் நெஞ்சை * இளகுவிக்கும் மால் அழகு *
சூழ வந்து தோன்றித் துயர் விளைக்க ** - ஆழு மனம்
தன்னுடனே அவ்வழகைத் * தான் உரைத்த மாறன் பால் *
மன்னும் அவர் தீவினை போம் மாய்ந்து 67

மாயாமல் தன்னை வைத்த * வைசித்திரியாலே *
தீயா விசித்திரமாச் சேர் பொருளோடு - ஓயாமல்[5] **
வாய்ந்து நிற்கும் மாயன் * வளம் உரைத்த மாறனை நாம் *
ஏய்ந்துரைத்து வாழு நாள் என்று? 68

என்தனை நீர் அங்கு வைத்தது * ஏதுக்கென * மாலும்
என்தனக்கும் என்தமர்க்கும் இன்பம் அதா ** - நன்று கவி
பாடவெனக் * கைம்மாறு இலாமை * பகர் மாறன்
பாடணைவார்க்கு உண்டாம் இன்பம் 69

இன்பக் கவி பாடுவித்தோனை * இந்திரையோடு *
அன்புற்று வாழ் திருவாறன்விளையில் ** - துன்பம் அறக்
கண்டடிமை செய்யக் * கருதிய மாறன் கழலே *
திண் திறலோர் யாவர்க்கும் தேவு 70

தேவன் உரை பதியில் * சேரப் பெறாமையால் *
மேவும் அடியார் வசனாம் மெய்ந்நிலையும் ** - யாவையும் தா
னாம் நிலையும் சங்கித்து * அவை தெளிந்த மாறன் பால் *
மாநிலத்தீர்! நங்கள் மனம் 71

நங்கருத்தை நன்றாக * நாடி நிற்கும் மால் அறிய *

---

[5] ஆயாமல்

இங்கிவற்றில் ஆசை எமக்குளதென்? - சங்கையினால் **
தன் உயிரில் மற்றில் நசை * தான் ஒழிந்த மாறன் தான் *
அந்நிலையை ஆய்ந்துரைத்தான் அங்கு 72

அங்கமரர் பேண * அவர் நடுவே வாழ் திருமாற்கு *
இங்கோர் பரிவரிலை என்றஞ்ச ** - எங்கும்
பரிவருளர் என்னப் * பயம் தீர்ந்த மாறன் *
வரிகழல் தாள் சேர்ந்தவர் வாழ்வார் 73

வாராமல் அச்சம் இனி * மால் தன் வலியினையும் *
சீரார் பரிவருடன் சேர்த்தியையும் ** - பாரும் எனத்
தான் உகந்த மாறன் தாள் * சார் நெஞ்சே! சாராயேல் *
மானிடவரைச் சார்ந்ததுமாய் 74

மாயன் வடிவழகைக் * காணாத வல்விடா
யாய் * அதற விஞ்சி அழுது அலற்றும் ** - தூய புகழ்
உற்ற சடகோபனை * நாம் ஒன்றி நிற்கும் போது பகல் *
அற்ற பொழுதானது எல்லியாம் 75

எல்லி பகல் நடந்த * இந்த விடாய் தீருகைக்கு *
மெல்ல வந்து தான் கலக்க வேணும் என ** - நல்லவர்கள்
மன்னு கடித்தானத்தே * மால் இருக்க மாறன் கண்டு *
இந்நிலையைச் சொன்னான் இருந்து 76

இருந்தவன் தான் வந்து * இங்கு இவர் எண்ணம் எல்லாம்
திருந்த * இவர் தம் திறத்தே செய்து ** - பொருந்தக்
கலந்து இனியனாய் * இருக்கக்[6] கண்ட சடகோபர் *
கலந்த நெறி கட்டுரைத்தார் கண்டு 77

கண் நிறைய வந்து * கலந்த மால் இக்கலவி *
திண்ணிலையா வேணும் எனச் சிந்தித்து ** - தண்ணிதெனும்
ஆருயிரின் ஏற்றம் * அது காட்ட ஆய்ந்துரைத்தான் *
காரி மாறன் தன் கருத்து 78

கருமால் திறத்தில் * ஒரு கன்னிகையாம் மாறன் *
ஒருமா கலவி உரைப்பால் ** - திரமாக
அன்னியருக்கு ஆகாது * அவன் தனக்கே ஆகும் உயிர் *
இந்நிலையை ஒரு[7] நெடிதா 79

***** நெடுமால் அழகு தனில் * நீள் குணத்தில் * ஈடு
படுமா நிலை உடைய பத்தர்க்கு[8] ** - அடிமை தனில்

---

[6] நிற்க
[7] ஓர்

எல்லை நிலம் தானாக * எண்ணினான் மாறன் * அது
கொல்லை நிலமான நிலை கொண்டு 80

கொண்ட பெண்டிர் தாம் முதலாக் * கூறும் உற்றார் கன்மத்தால் *
அண்டினவர் என்றே அவரை விட்டு ** - தொண்டருடன்
சேர்க்கும் * திருமாலைச் சேரும் என்றான் * ஆர்க்கும் இதம்
பார்க்கும் புகழ் மாறன் பண்டு 81

பண்டை உறவான பரனைப் * புளிங்குடிக்கே
கண்டு * எனக்கு அல்லா உறவின் காரியமும் ** - தண்டற நீ
செய்தருள் என்றே இரந்த * சீர் மாறன் தாளிணையை[9] *
உய்துணை என்று உல்லாமே! ஓர் 82

ஓரா நீர் வேண்டினவை * உள்ளதெல்லாம் செய்கின்றேன் *
நாராயணனன்றோ நான் என்று ** - பேருறவைக்
காட்ட * அவன் சீலத்தில் கால் தாழ்ந்த மாறன் அருள் *
மாட்டி விடும் நம் மனத்து மை 83

மையார் கண் மாமார்பில் * மன்னும் திருமாலை *
கையாழி சங்குடனே காண எண்ணி ** - மெய்யான
காதலுடன் கூப்பிட்டுக் * கண்டுகந்த மாறன் பேர் *
ஓத உய்யுமே இன்னுயிர் 84

இன்னுயிர் மால் தோற்றினது[10] * இங்கு என் நெஞ்சில் என்று * கண்ணால்
அன்னவனைக்[11] காண எண்ணி ஆண் பெண்ணாய் ** - பின்னை அவன்
தன்னை நினைவிப்பவற்றால் * தான் தளர்ந்த மாறன் அருள் *
உன்னும் அவர்க்கு உள்ளம் உருகும் 85

உருகு மால் என்னெஞ்சம் * உன் செயல்கள் எண்ணி *
பெருகு மால் வேட்கை எனப் பேசி ** - மருவுகின்ற
இன்னாப்புடன் அவன் சீர் * ஏய்ந்துரைத்த மாறன் சொல் *
என்னாச் சொல்லாதிருப்பது எங்கு? 86

எங்காதலுக்கடி * மால் ஏய்ந்த வடிவழகு என்று *
அங்காது பற்றாசா ஆங்கவன் பால் ** - எங்கும் உள்ள
புள்ளினத்தைத் * தூதாகப் போக விடும் மாறன் தாள் *
உள்ளினர்க்குத் தீங்கை அறுக்கும் 87

---

[8] பத்தர்

[9] தாளிணையே

[10] தோன்றினது

[11] அன்றவனைக்

அறுக்கும் இடர் என்று * அவன் பால் ஆங்கு விட்ட தூதர் *
மறித்து வரப் பற்றா மனத்தால் ** - அறப்பதறிச்
செய்ய திருநாவாயில் * செல்ல நினைந்தான் மாறன் *
மையலினால் செய்வறியாமல் 88

மல்லடிமை செய்யும் நாள் * மால் தன்னைக் கேட்க * அவன்
சொல்லும் அளவும் பற்றாத் தொன்னலத்தால் ** - செல்கின்ற
ஆற்றாமை பேசி * அலமந்த மாறன் அருள் *
மாற்றாகப் போகும் என்தன் மால் 89

* மால் உமது வாஞ்சை முற்றும் * மன்னும் உடம்பின் முடிவில் *
சால நண்ணிச் செய்வன் எனத் தான் உகந்து ** - மேலவனிச்
சீரார் கணபுரத்தே * சேரும் எனும் சீர் மாறன் *
தாரானோ நந்தமக்குத் தாள் 90

தாள் அடைந்தோர் தங்கட்குத் * தானே வழித் துணையாம் *
காளமேகத்தை கதியாக்கி ** - மீளுதலாம்
ஏதமிலா விண்ணுலகில் * ஏக எண்ணும் மாறன் என *
கேதம் உள்ளதெல்லாம் கெடும் 91

கெடும் இடர் வைகுந்தத்தைக் * கிட்டினாற் போல் *
தடமுடை அநந்தபுரம் தன்னில் ** - பட அரவில்
கண்துயில் மாற்கு ஆட்செய்யக் * காதலித்தான் மாறன் * உயர்
விண்தனில் உள்ளோர் வியப்பவே 92

வேய்மரு தோளிந்திரைகோன் * மேவுகின்ற தேசத்தை *
தான் மருவாத் தன்மையினால் ** தன்னை இன்னம் - பூமியிலே
வைக்குமெனச் சங்கித்து * மால் தெளிவிக்கத் தெளிந்த *
தக்க புகழ் மாறன் எங்கள் சார்வு 93

சார்வாகவே அடியில் * தான் உரைத்த பத்தி தான் *
சீரார் பலத்துடனே சேர்ந்ததனை ** - சோராமல்
கண்டுரைத்த மாறன் * கழலிணையே நாள் தோறும் *
கண்டுகக்கும் என்னுடைய கண் 94

கண்ணன் அடியிணையில் * காதலுறுவார் செயலை *
திண்ணமுறவே சுருங்கச் செப்பியே ** - மண்ணவர்க்குத்
தான் உபதேசிக்கை * தலைக் கட்டினான் மாறன் *
ஆன புகழ் சேர் தன்னருள் 95

அருளால் * அடியில் எடுத்த மாலன்பால் *
இருளார்ந்த தம்முடம்பை இச்சித்து ** - இருவிசும்பில்

இத்துடன் கொண்டேக * இசைவு பார்த்தே இருந்த *
சுத்தி சொல்லும் மாறன் செஞ்சொல் 96

செஞ்சொற் பரன் தனது * சீராரும் மேனி தனில் *
வஞ்சித்துச் செய்கின்ற வாஞ்சை தனின் ** - விஞ்சுதலைக்
கண்டவனைக் கால்கட்டிக் * கை விடுவித்துக் கொண்ட *
திண்திறல் மாறன் நம் திரு 97

திருமால் தன் பால் * விருப்பம் செய்கின்ற நேர் கண்டு *
அருமாயத்து அன்று அகல்விப்பானென்? ** - பெருமால் நீ
இன்று என் பால் செய்வான் என்னென்ன * இடருற்று நின்றான் *
துன்னு புகழ் மாறனைத் தான் சூழ்ந்து 98

* சூழ்ந்து நின்ற மால் விசும்பில் * தொல்லை வழி காட்ட *
ஆழ்ந்து அதனை முற்றும் அனுபவித்து ** - வாழ்ந்து அங்கு
அடியருடனே * இருந்தவாற்றை உரை செய்தான் *
முடி மகிழ் சேர் ஞான முனி 99

* முனி மாறன் முன்பு உரை செய் * முற்றின்பம் நீங்கி *
தனியாகி நின்று தளர்ந்து ** - நனியாம்
பரம பத்தியால் நைந்து * பங்கயத் தாள் கோனை *
ஒருமையுற்றுச் சேர்ந்தான் உயர்ந்து 100

**மணவாள மாமுனிகள் திருவடிகளே சரணம்**